செ.வெ.எண்: 201/2019 நாள்: 16.4.2019

**பாராளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் சித்ரா பௌர்ணமி கிரிவலப் பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் சித்ரா பௌர்ணமி மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் முன்னிட்டு இன்று (16.4.2019) 14 கி.மீ. கிரிவலப் பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசு பேருந்தில் 2 மணி நேரம் பயணம் மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் திரு. பி. ஜெயசேகர் அவர்கள், துணை காவல் கண்காணிப்பாளர் திரு. அண்ணாதுரை அவர்கள், வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீதேவி அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. ஜி. அரவிந்தன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் மூர்த்தி, தீர்த்தம், தலம் என்னும் மூவகைகளாலும் சிறப்பு பெற்ற திருத்தலமாகும். இத்திருத்தலம் பஞ்சபூத தலங்களுள் நடுநாயகமாக, அக்னி தலமாக விளங்குகிறது. இத்திருத்தலத்தில் உள்ள மலையே சிவலிங்க வடிவமாக (சுயம்பு வடிவமாக) காட்சியளிப்பதால், இன்றளவும் பல சித்தர்கள் வாசம் செய்வதாக ஐதீகம். இத்திருத்தலத்தில் ஒவ்வொரு பௌர்ணமி திதி அன்றும், தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருகை தந்து 14 கி.மீ. கிரிவலம் செய்து வழிபடுகின்றனர். இதில், சித்திரை மாதத்தில் வருகின்ற பௌர்ணமி மிகவும் விசேஷமாக அமைந்திருப்பதால், அன்றைய தினம் பல இலட்சம் பக்தர்கள் கிரிவலம் வருகிறார்கள். இதன்படி, இந்த ஆண்டு வரும் 18.04.2019 (வியாழக்கிழமை) இரவு 07.05 மணியளவில் பௌர்ணமி திதி தொடங்கி, மறுநாள் 19.04.2019 (வெள்ளிக்கிழமை) மாலை 05.35 வரை பௌர்ணமி திதி உள்ளது. மேலும், பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு 18.04.2019 அன்று காலை 07.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவும் நடைபெறுகிறது.

இதனை முன்னிட்டு இன்று (16.4.2019) மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம், வருவாய்த் துறை, காவல் துறை ஆகிய துறை அலுவலர்களுடன் திறந்தவெளி வாகனத்தில் 14 கி.மீ. கிரிவலப் பாதையில் சித்ரா பௌர்ணமி மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஈசான்ய மைதானத்திலிருந்து, ஈசான்ய லிங்கம், நகராட்சி மத்திய பேருந்து நிலையம், சின்னக் கடை தெரு, தேரடி வீதி, ராஜகோபுரம், திருவூடல் தெரு, திருமஞ்சன கோபுர வீதி, பழைய அரசு மருத்துவமனை, செங்கம் சாலை,

அரசு கலைக் கல்லூரி, ஆணாய்பிறந்தான், அடிஅண்ணாமலை, அபய மண்டபம், காஞ்சி சாலை, இடுக்குப் பிள்ளையார் கோயில் வழியாக அண்ணா நுழைவு வாயில் வரை தற்காலிக பேருந்து நிறுத்தம், குடிநீர் வசதி, கழிவறை வசதி, போக்குவரத்து வசதி, நடைபாதையில் நிழற்கூறை அமைக்கும் பணிகள், வாக்கு எண்ணும் மைங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லும் பாதைகள், அன்னதானம் வழங்கும் இடங்கள், உட்பட பல்வேறு பணிகள் நடைபெற்று வருவது குறித்து அரசுப் பேருந்தில் பயணம் மேற்கொண்டு நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் 'திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு 18.4.2019 மாலை 07.00 மணி முதல் 19.4.2019 மாலை 05.00 மணி வரை இலட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வருவார்கள் என எதிர்பார்கப்படுகிறது. கிரிவலப் பாதையில் கூடுதலாக 60 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படுகிறது, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 2900 பேருந்துகள் திருவண்ணாமலைக்கு இயக்கப்படுகிறது, இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுடன் 1600 காவலர்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். மேலும், வாக்கு எண்ணும் மையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் மாற்றுத் பாதையில் எடுத்துச் செல்வதற்கான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. திருவண்ணாமலை நகரத்தை சுற்றி 9 அணுகு சாலைகளில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்படுகிறது. இந்த தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து கிரிவலப் பாதை அருகாமை வரை தொடர் பேருந்துகள் பக்தர்கள் அழைத்து செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளது.

திருவண்ணாமலை இரயில் நிலையம் அருகில் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால், பெருமாள் நகர் வழியாக மாற்றுப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுரர் திருக்கோயில் வளாகத்தில் பக்தர்களின் வசதிக்காக குடிநீர், கழிவறை, தரையில் தண்ணீர் தெளித்தல், குளிர் வண்ணம், கம்பளம், வரிசையில் நிற்கும் பக்தர்களுக்கு குடிநீர், நீர்மோர் வழங்கும் பணிகள், உட்பட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்துதரப்படுகிறது. கிரிவலப் பாதையில் முழுவதும் ஒளிபெருக்கிகள் ஃபைபர் ஆப்டிகள் கேபிள் மூலம் இணைக்கப்பட்டு பக்தர்களுக்கு தொடர்ந்து தகவல்கள் தெரிவிக்கப்படவுள்ளது. மேலும், கிரிவலப் பாதையில் குடிநீர் வசதி, கழிவறை வசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளும், அன்னதானம் வழங்கும் இடங்களும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், காலை, மதியம், மாலை நேரங்களில் கிரிவப் பாதையில் லாரிகள் மூலம் தண்ணீர் தெளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆழ்துளை கிணறுகள் மூலம் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**